**கவனிக்க.-** 2016.02.05 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1954 - 2016 පෙබරවාරි මස 12 වැනි සිකුරාදා - 2016.02.12

*1954 ஆம் இலக்கம் – 2016 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 244 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 245 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 252 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2016, மாச்சு மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, பெப்புருவரி மாதம் 19ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01ஆந் திகதி.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# கேள்விப் பத்திர அறிவித்தல்கள்

***காணி அமைச்சு***

*இலங்கை நில அளவைத் திணைக்களம் விலைமனுக் கோரல்*

***பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்கு பெற்றுக்கொள்ளல் - 2016***

*கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச நிலஅளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை இரண்டு வருட காலத்திற்கு வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகங்களின் அலுவலகங்களில் விலைமனுக்கோரல்கள் 2016.2.25 ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் விலைமனுக் கோரல்கள் பி. ப. 2.05 மணிக்கு திறக்கப்படும்.*

***அட்டவணை***

| மாகாணம் | மாவட்டம் | பிரதேச நில அளவை அலுவலகம் | கேள்விமனு ஒப்படைத்தல் | அருகில் உள்ள நகரம் | தேவைப்படும் திகதி |
|---|---|---|---|---|---|
| மேல் மாகாணம் | கொழும்பு | கொழும்பு | மாகாண நில அளவையாளர் நாயகம் (மேல் மாகாணம்), நில அளவையாளர் நாயக அலுவலகம், கிருல வீதி, கொழும்பு 5 | பன்னிப்பிட்டிய/பத்தர முல்லைக்கு அருகாமையில் | 2016.05.01 |
| மேல் மாகாணம் | கொழும்பு | தெஹிவளை (பிம்சவிய) | மாகாண நில அளவையாளர் நாயகம் (மேல் மாகாணம்), நில அளவையாளர் நாயக அலுவலகம், கிருல வீதி, கொழும்பு 5 | தெகிவளை | 2016.05.01 |
| மத்திய மாகாணம் | கண்டி | கண்டி | மாகாண நில அளவையாளர் நாயகம் (மத்திய மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயக அலுவலகம், கன்னொருவ பேராதெனிய | கண்டி | 2016.03.01 |
| மத்திய மாகாணம் | கண்டி | யட்டிநுவர | மாகாண நில அளவையாளர் நாயகம் (மத்திய மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயக அலுவலகம், கன்னொருவ பேராதெனிய | யட்டிநுவர (03 கி.மீற்றருக் குட்பட்ட) | 2016.03.01 |
| மத்திய மாகாணம் | மாத்தளை | நாவுல | மாகாண நில அளவையாளர் நாயகம் (மத்திய மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயக அலுவலகம், கன்னொருவ பேராதெனிய | நாவுல | 2016.03.01 |

***பூரணப்படுத்தப்பட வேண்டிய பொதுவான தேவைப்பாடுகள் :***

*அனைத்துக் கட்டிடங்களும் பாதுகாப்பு சுற்றுமதில் அல்லது கம்பி வேலி மூலமாக பாதுகாக்கப்பட்டிருத்தல் வேண்டும். தண்ணீர்க் குழாய் வசதிகளைக் கொண்டிருப்பதுடன் அழுக்குகள் மற்றும் வடிநீர் செல்வதற்கான முறையான வடிகாலமைப்பு இருத்தல் வேண்டும். தனியான நீர்மாணி மற்றும் மின்மாணி என்பன வேறு வேறாக பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். உரிய இடத்திற்கு அண்மித்த பிரதேசங்களில் இருந்து அதிக ஒலியை எழுப்பக்கூடிய தொழிற்சாலைகளோ அல்லது அது போன்ற வேறு ஏதாவது பட்டறைகளோ இல்லாதிருத்தல் வேண்டும். கட்டிடம் தாபிக்கப்பட்டிருப்பது பெருந்தெருவுக்கு அண்மித்ததாக இல்லாதிருப்பின் அதற்குச் செல்வதற்கு முறையான போக்குவரத்துப் பாதை இருத்தல் அவசியமாகும்.*

*கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினைப் பூரணப்படுத்தவேண்டிய பொதுவான தேவையான சகல விபரங்களுடனான விலைமனுக்கோரல் அது அடங்கிய தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''பிரதேச*

நில அளவை அலுவலகங்களை வாடகைக்கு பெறுதல் ( இடத்தின் பெயர்)"எனக் குறிப்பிட்டு 2016.2.25 ஆந் திகதி அன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக சம்பந்தப்பட்ட மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படவோ அல்லது நேரடியாகவோ கையளிக்கப்படவோ வேண்டும்.

நிலஅளவையாளர் நாயகம்.

நிலஅளவையாளர் நாயகம். அலுவலகம்,
கிருல வீதி,
கொழும்பு 5.
2016, சனவரி 25.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பிரதேச நிலஅளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் - 2016**
**விலைமனுக்கோரல்- 2016**

கட்டிட உரிமையாளர் விபரம் -

1. முழுப்பெயர் :----.
2. முகவரி :----.
3. தொலைபேசி இலக்கம் :----.
4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

கட்டிடம் தொடர்பாக-

1. எந்த பிரதேச நிலஅளவை அலுவலகத்திற்காக கட்டிடம் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது ? :----.
2. மாதாந்த வாடகைத் தொகை :----.
3. தாபிக்கப்பட்டுள்ள இடத்தின் முகவரி :----.
4. உரிய நகரத்திலிருந்து தாபிக்கப்பட்டுள்ள இடத்திற்கு உரிய தூர அளவு கி. மீ. :----.
5. இடத்தின் விஸ்தீரணம் :----.
6. கட்டிடத்தின் சதுர அடி அளவும் அறைகளின் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் :----.
7. தனியாக அவதானிக்கக்கூடிய நீர்மாணி பொருத்தப்பட்டுள்ளதா ? :----.
8. தனியாக அவதானிக்கக்கூடிய மின்மாணி பொருத்தப்பட்டுள்ளதா ? :----.
9. பாதுகாப்பு எல்லை தொடர்பான விபரம் (மதில்/கம்பி வேலி/.................... ) :----.
10. நிறுத்திவைக்கக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கை ? :----.
11. பிரதான வீதிக்குச் செல்வதற்கு எடுக்கும் நேர அளவு ? :----.
12. நல்ல முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதா ? விபரம் தரவும் :----.
13. தொலைபேசி வசதி இருப்பின், தொலைபேசி இலக்கம் :----.

மேலே என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை என்றும், வழங்கப்பட்டுள்ள தகவல் தவறானது எனத் தெரியவரும் பட்சத்தில் என்னால் அனுப்பப்பட்டுள்ள இந்த விலை மனு நிலஅளவையாளர் நாயகத்தினால் நிராகரிக்கப்படும் என்பதனை நான் நன்கு அறிவேன் என்றும் இத்தால் அறியத்தருகிறேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

2- 340

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வருமாறு கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : பெயார்வே அர்பன் ஹோம்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 108431
*கூட்டிணைப்புத் திகதி* : 2015, செத்தெம்பர் 16
*பதிவு முகவரி* : இல. 100, புத்கமுவ வீதி, ராஜகிரிய

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பீ. ஆர். செக்ரெடேரியல் சர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
பணிப்பாளர்.

2-249

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : மைதிசிஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 109099
*கூட்டிணைப்புத் திகதி* : 2015, ஒற்றோபர் 14
*கம்பனியின் பதிவு முகவரி* : இல. 100, புத்கமுவ வீதி, ராஜகிரிய

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பீ. ஆர். செக்ரெடேரியல் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
பணிப்பாளர்.

2-250

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : ப்ரயோரிடி இன்வெஸ்ட்மன்ட் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 106839
*கூட்டிணைப்புத் திகதி* : 2015, யூலை 08
*பதிவு முகவரி* : இல. 100, புத்கமுவ வீதி, ராஜகிரிய

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பீ. ஆர். செக்ரெடேரியல் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
பணிப்பாளர்.

2-251

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : எம். எஸ். இம்போர்ட் அன்ட் எக்ஸ்பொர்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 110246
*கூட்டிணைப்புத் திகதி* : 2015, திசெம்பர் 4
*பதிவுசெய்யப்பட்டுள்ள முகவரி* : இல. 257/4, டொரிங்டன் அவெனியூ, கொழும்பு 5

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பீ. ஆர். செக்ரெடேரியல் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
பணிப்பாளர்.

2-252

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்9(1) ஆம் பிரிவின்கீழ், ஹாப்லைப் (பிறைவேட்) லிமிட்டெட் கூட்டிணைக் கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : ஹாப்லைப் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 110520
*கூட்டிணைப்புத்திகதி* : 2015, திசெம்பர் 15
*பதிவு முகவரி* : இல. 159, ஸ்ரீ சதர்ம மாவத்தை, கொழும்பு 10

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கோப்பரேட் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,

செயலாளர்கள்.

2-390

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : லங்கா அகார்வூட் பிலான்டேசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீ வீ 110381
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2015, திசெம்பர் 09
*பதிவு முகவரி* : இல. 68/60, டி.எஸ். விஜேசிங்க மாவத்தை, கட்டுபெத்த,மொரட்டுவை

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

மெனேஜ்மன்ட் அன்ட் பிஸ்னஸ் எட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,

கம்பனிச் செயலாளர்கள்.

2-431

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : டிஸ்டிலரீஸ் ஓஷனா குரூப் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இல.* : பீவீ 110848
*கூட்டிணைப்புத் திகதி* : 2015, திசெம்பர் 30
*கம்பனியின் பெயர்* : ட்ரேடிட் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இல.* : பீவீ 111323
*திகதி* : 2016, சனவரி 18
*பதிவுசெய்யப்பட்டுள்ள முகவரி* : 6 ஆம் மாடி, ஈஎல்பி, உலக வர்த்தக மையம் , கொழும்பு 1

கம்பனிச் செயலாளர்கள்

2-435

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், குறிப்பிட்டுள்ள பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் 2015, ஏப்பிறல் 01 ஆந் திகதி கூட்டிணைக் கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : எப்பரல் வெப் 2050 (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 104897
*பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி* : இல. 78, றொஸ்மிட் பிளேஸ், கொழும்பு 7

நிறுவனத்தின் முகாமையாளர்,
கோ- சேர்வ் ( பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்.

2-261

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவுக்கேற்ப 2015, திசெம்பர் 22 ஆம் திகதி சென்ட் பென்சிஸ்கோ ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் கூட்டிணைக்கப்பட்டுள்ளது பற்றி இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : சென்ட் பென்சிஸ்கோ ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கூட்டிணைப்புத் திகதி* : 2015, திசெம்பர் 22
*கம்பெனியின் இல.* : பீவீ 110585
*கம்பெனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம்* : இல. 124, கொழும்பு வீதி, பாலாவி, புத்தளம்

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனி செயலாளர்கள்.
பீ. ஈ. சம்பிக றொட்றிகோ,
தொ.இல. 077-2205857

2-280

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : கொன்கோர்ட் லேசர் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 103081
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2014, திசெம்பர் 30
*பதிவு முகவரி* : இல. 415/ஏ, 10-2, 3 ஆம் லேன், வானகுரு மாவத்தை, ஹோகந்தர

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சம்பத் சாமிந்த கமகே,
கம்பனிச் செயலாளர்.

2-308

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் தனியார் கம்பனி கூட்டிணைக் கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : எஸ். ஜீ. எம். மீடியா (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 110182
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2015.12.02
*பதிவு முகவரி* : இல. 163/15, நாவல வீதி, நாராஹேன்பிட்டி, கொழும்பு 5

கம்பனிச் செயலாளர்கள்,
எல். எம். மெனேஜ்மன்ட் சேவிசஸ் ( பிறைவேட்) லிமிட்டெட்,
இல. 291/32 ஏ,
ஹெவ்லொக் பூங்கா, ஹெவ்லொக் வீதி,
கொழும்பு 5.

2-309

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பழைய பெயர்* : ஜெம்சிக்ஸ் ஜெம்ஸ் என்ட் ஜுவலரி (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 111103
*கூட்டிணைப்புத் திகதி* : 2016. 01.08
*பதிவு முகவரி* : இல. 15/ 1 / 1,அல்பிரட் ஹவுஸ் கார்டின்ஸ், கொழும்பு 3

த்ரீ அசோசியேற்ஸ் ( பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்.

2-312

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : செலினா ஈ த்ரீ எக்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 100237
*பெயர் மாற்றத் திகதி* : 2015.12.28
*பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி* : 26 ஆம் மாடி, கிழக்கு கோபுரம், உலக வர்த்தக மையம், எக்சலன் சதுக்கம், கொழும்பு 1
கம்பனியின் புதிய பெயர் : சீ. ஈ. த்ரீ எக்ஸ் ஹோல்டிங்ஸ் ( பிறைவேட்) லிமிட்டெட்

த்ரீ. எம். எசோஸியேற்ஸ் ( பிறைவேட்) லிமிடெட்,
கம்பனிச் செயலாளர்.

2-313

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

ப்ளூ கிங்டம் இன்டர்நெஷனல் (பிறைவேட்) லிமிட்டெட் 2015. 12.22 ஆம் திகதி கூட்டிணைக்கப்பட்டது. அது பி.வி. 110701 என்ற கம்பனி பதிவெண்ணைக் கொண்டிருப்பதுடன் அதனது பதிவு அலுவலகம் கொழும்பு 3, சென்ட் அந்தோனிஸ் வீதி, "லக்கி பிளாஸா", 8/2, என்ற இலக்கத்திலமைந்துள்ளது.

த்ரீ. எம். எசோஸியேற்ஸ் ( பிறைவேட்) லிமிடெட்,
கம்பனிச் செயலாளர்.

2-314

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : ஹரஸர லங்கா இன்டர்நெஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 86776
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2012.06.26
*பதிவு முகவரி* : இல. 521/22, மைத்திரிபால சேனாநாயக்க மாவத்தை, அநுராதபுரம்

த்ரீ. எம். எசோஸியேற்ஸ் ( பிறைவேட்) லிமிடெட்,
கம்பனிச் செயலாளர்.

2-315

## அறிவித்தல்

*2015.11.23 ஆம் திகதியிலிருந்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் பெயர் மாற்றப்பட்டுள்ளதென 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ், நாம் இத்தால் அறிவித்தல் வழங்குகின்றோம் :-*

*கம்பனியின் முதன்மைப் பெயர்* : செலினா கெபிடல் கோபரேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பிவி 68561
*பதிவு அலுவலக முகவரி* : இல. 5/21, சுலைமான் டெரஸ், கொழும்பு 5
*கம்பனியின் புதிய பெயர்* : செலினா கெபிடல் கோபரேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்

எம். எம். விஜித மனம்பேரி,
கம்பனிச் செயலாளர்.

2-316

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : ஷைன் டீ ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 110898
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2015.12.30
*பதிவு முகவரி* : இல. 11 ஏ, 1 ஆம் ஒழுங்கை, பகோடா சாலை, நுகேகொடை

டபிள்யூ. எஸ். வீரமன்,
செயலாளர்,
இல. 27/1, பெப்பிலியான வீதி,
நெதிமாலை, தெஹிவளை.

2-275

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : ஒரிட்ஸ் வோ பிரேன்ட்டட் லைப் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு முகவரி* : இல. 50, கொழும்பு பாதை, கம்பஹா
*பதிவு இலக்கம்* : பீவீ 110682
*ஆரம்பிக்கப்பட்ட திகதி* : 2015.12.22

செயலாளர்.

2-262

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், கீழ்வரும் கம்பனி பின்வருமாறு கூட்டிணைக் கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : டிரிப் ஒப் கர்மா (பீவீரீ) எல்ரீடீ
*கம்பனியின் இலக்கம்* : பிவி 111018
*கூட்டிணைப்புத் திகதி* : 2016, சனவரி 19
*கம்பனி பதிவு முகவரி* : இல. 42/7, கஹடகஹத்தை, வேவல, ஹிக்கடுவ

பணிப்பாளர்.

2-378

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : ஸ்கைலைன் என்டர் டெய்ன்மன்ட் என்ட் கன் சல்டன்சி (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 109202
*கூட்டிணைப்புத் திகதி* : 2015.10.26
*பதிவு முகவரி* : 66, கலல்கொட வீதி, கலல்கொட, பன்னிபிடிய

கம்பனிச் செயலாளர்.

2-384

## அறிவித்தல்

### ஸ்றேடியன்ஸ் கெப்பிட்டல் எஸ்ஹோல்டிங்ஸ் (பிறைவெட்) லிமிட்டெட்
### முன்பு ஸ்றேடியன்ட் கெப்பிட்டல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பிறைவெட்) லிமிட்டெட்

கம்பனி பதிவு இலக்கம் பீவீ 91493

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் கீழ் பெயர் மாற்றம் தொடர்பான பகிரங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் படி ஸ்றேடியன்ட் கெப்பிட்டல் இன்வெஸ்ட்மன்ட் (பிறைவெட்) லிமிட்டெட் (முன்னைய பெயர்) என்ற அதன் பெயரை ஸ்றேடியன்ட் கெப்பிட்டல் ஹோல்டிங்ஸ் ( பிறைவேட்) லிமிட்டெட் ( புதிய பெயர்) என 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 19 ஆந் திகதி ( கம்பனி பதிவு இலக்கம் பீவீ 91493) இன் கீழ் தன் பெயரை மாற்றம் செய்துள்ளது என்பதையும் இக்கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இல. 16-03, 16 ஆம் மாடி, கிழக்குக் கோபுரம், உலக வர்த்தக மையம், எக்சலன் சதுக்கம், கொழும்பு 01 இல் அமைந்துள்ளது என்பதை இத்தால் நாம் பகிரங்க அறிவித்தல் தருகின்றோம்.

சரவணன் நீலகண்டன்,
என் அன்ட் என். ஏஜென்ஸ் அன்ட் செக்கரட்டறீஸ்
( பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் கம்பனிச் செயலாளர்கள்.

எம் & என். கட்டிடம்( 5 ஆம் மாடி),
இல. 2, டீல் பிளேஸ், கொழும்பு -00300

2-299

---

## அறிவித்தல்

### டீ.ஜீ.எஸ். ஹோல்டிங்ஸ் (பிறைவெட்) லிமிட்டெட்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59(2) ஆம் பிரிவிற்கமைய கம்பனியொன்றின் கூறப்பட்ட மூலதனத்தின் குறைப்பு தொடர்பான பகிரங்க அறிவித்தல்
( கம்பனி பதிவு இலக்கம் பீவீ 11597)

கம்பனியின் பெயர் : டிஜிஎஸ்ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 11597
கம்பெனியின் பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 165/7, பார்க் வீதி, கொழும்பு 5
குறைப்பின் முன் கூறப்பட்ட மூலதனம் : ரூ.50, 000, 000.00
குறைப்பின் பின் கூறப்பட்ட மூலதனம் : ரூ.20.00
குறைக்கப்பட்ட பெறுமானம் : ரூ.49, 999, 980.00

சரவணன் நீலகண்டன்,
எம் அன்ட் என். ஏஜென்ஸ் அன்ட் செக்கரட்டறீஸ்
( பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனிச் செயலாளர்கள்.

எம் & என். கட்டிடம்( 5 ஆம் மாடி),
இல. 2, டீல் பிளேஸ், கொழும்பு -00300

2-298

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

அநுராதபுரம், பிரசித்த நொத்தாரிசு சட்டத்தரணி நதீ ஆகஸ் குரேராவினால் 2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 12 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 7415 என்ற இலக்கமுடைய அற்றோணித் தத்துவம் 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 8 ஆம் திகதியிலிருந்து இல்லாதொழிக்கப்பட்டுள்ளதென மெரின் ஜகத் அத்துகோறள ஆகிய என்னால் அறிவிக்கப்படுகின்றது.

2-225

---

## அறிவித்தல்

### மியுச்சுவல் சிக்கியூரிட்டீஸ் (பிறைவெட்) லிமிட்டெட்
### கம்பனி இலக்கம் பீவி 10370 அங்கத்தவர்களின் தன்னிச்சையான கலைப்பு

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 320 (1) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அங்கத்தவர்களின் தன்னிச்சையான கலைப்பு என்ற வகையில் இந்த கம்பனியைக் கலைக்கவும் கொழும்பு 2, வொக்ஷோல் வீதி, இலக்கம் 141/ 3 ஐச் சேர்ந்த பட்டயக் கணக்காளர் திரு. ராஜபக்ஷ பத்திரன்னெஹெலாகே வசந்த சமிந்த ராஜபக்ஷவை கம்பனியின் கலைப்பாளராக 2016, பெப்புருவரி மாதம் 02 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வரத்தக்கதாக நியமிக்கவும் கொழும்பு 2, வொக்ஷோல் வீதி, இலக்கம் 141/ 3 முகவரியில் 2016, பெப்புருவரி மாதம் 02 ஆந் திகதி நடாத்தப்பட்ட இக்கம்பனியின் அதி விசேட மகாசபைக் கூட்டத்தில் பிரேரணை நிறைவேற்றப்பட்டதென்பது 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கமுடைய கம்பனிகள் சட்டத்தின் 319(1) (ஆ) பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஆர்.பீ.டபிள்யூ. சீ. ராஜபக்ஷ,
கலைப்பாளர்,

இல. 141/ 3, வொக்ஷோல் வீதி,
கொழும்பு 2.

2-345/ 1

---

## அறிவித்தல்

### மியுச்சுவல் சிக்கியூரிட்டீஸ் (பிறைவெட்) லிமிட்டெட்
### கம்பனி இலக்கம் பீவி 10370 கலைப்பாளரொருவரை நியமித்தலுக்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 346 (1) ஆம் பிரிவின் பிரகாரமான அறிவித்தல்

2016, பெப்புருவரி மாதம் 02 ஆந் திகதி நடாத்தப்பட்ட இக்கம்பனியின் அதி விசேட மகா சபைக் கூட்டத்தில் மியுச்சுவல் சிக்கியூரிட்டீஸ் (பிறைவேட்) லிமிட்டெட் கம்பனியின் கலைப்பாளராக கம்பனியின் அதிவிசேட பிரேரணை நிறைவேற்றப்பட்டதன் மூலமாக என்னை நியமித்துள்ளமையை கொழும்பு 2, வொக்ஷோல் வீதி, இலக்கம் 141/3 எனும் இடத்தைச் சேர்ந்த பட்டயக் கணக்காளர் ராஜபக்ஷ பத்திரென்னெஹெலாகே வசந்த சமிந்த ராஜபக்ஷ ஆகிய நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

ஆர்.பீ.டபிள்யூ. சீ. ராஜபக்ஷ,
கலைப்பாளர்,

இல. 141/ 3, வொக்ஷோல் வீதி,
கொழும்பு 2.

2-345/ 2

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் படுவத்த, "ஹர்ஷ" வில் வதியும் ரன்வலகே தேவப்பிரிய சந்தரசேகர பெரேராவினால் எஸ். எஸ். ரெசிகா ருவணி என்ற பிரசித்த நொத்தாரிஸ் மூலம் 2015.12.17 ஆந் திகதியன்று கணேமுல்லையில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 461 ஆம் இலக்க அற்றோணி தத்துவத்தின் மூலம், கணேமுல்லை, கிரிந்திவிட்ட வீதி, இலக்கம் 435 இல் வதியும் ரன்வலகே பிரியங்கிகா ரன்வல என்றழைக்கப்படும் ரன்வலகே பிரியங்கிகா ரன்வல விஜயகுணவர்தன ஆகிய எனக்கு வழங்கப்பட்ட அற்றோணி அதிகாரம் இரத்துச் செய்யப்படுவதாக இத்தால் அனைவருக்கும் அறிவித்துக்கொள்கின்றேன்.

2-277

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பட்டுவத்த 'ஹர்ஷ' என்ற இடத்தில் வசித்து தற்போது அவுஸ்திரேலியா, 2154 நியு சவுத் வேல்ஸ், காசல் ஹில், காசல் வீதி, 18/59 ஏ, என்ற முகவரியிலுள்ள சஜீவ நிரோஷா பெரேரா ரண்வல என்பவரால் அவுஸ்திரேலியா சொலிசிட்டர் ருவன்பி சமரசிங்க என்பவரால் 2011 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 12 ஆம் திகதி அவுஸ்திரேலியாவில் கையொப்பமிட்டதும், பட்டுவத்த, பாடசாலை பாதை, 'ஹர்ச' என்ற இடத்தில் வதிபவரும் 333050277 V என்ற இலக்கமுடைய தே. அ. அட்டையையுடையவருமான ரண்வலகே தேவப்பிரிய சந்ரசேகர பெரேரா என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதென அனைவருக்கும் இத்தால் அறிவிக்கின்றேன்.

2-278

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு, பிரசித்த நொத்தாரிசு திருமதி திமுத்து நாணயக்கார என்பவரினால் 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 13 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் 564, என்ற இலக்கத்தையுடையதும் ஹெய்யன்துடுவ, மாபில, 174/4, என்ற இலக்கத்தில் வசிப்பவரும் 665080820 V என்ற இலக்க தேசிய அடையாள அட்டையையுடைய வருமான மஹபட்டுனகே இந்திரா பத்மசீலி ஆகிய நான், ஹெய்யன்துடுவ, தேவமித்த இடம், 271/ஏ/3 என்ற முகவரியில் வதியும் 6458 71391 V என்ற இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையையுடையவருமான மஹபட்டுனகே தோண லலிதா பத்மினி ஆகிய என்னால் மேலேயுள்ள மஹபட்டுனகே இந்திரா பத்மசீலி என்பவரை நியமனஞ் செய்யப்பட்ட அற்றோணித்தத்துவம் என்னால் இரத்துச் செய்யப்பட்டுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அனைத்து மக்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன்.

எம். டி. லலிதா பத்மினி

2-279

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இரத்தினபுரி மாவட்டம், இரத்தினபுரி பிரதேச செயலகப் பிரிவின் மல்வள, கொஸ்கொளவத்த, என்ற முகவரியில் வசிக்கும், 708441899 V என்ற தேசிய அடையாள அட்டை இலக்கமுடைய கொளுகந்தலாயே உதயாங்கனி ராமதாச ஆகிய என்னால் இரத்தினபுரி கொஸ்பலவத்த, 123/2 என்ற முகவரியில் வசிக்கும் 683520556 V என்ற தேசிய அடையாள அட்டை இலக்கத்தையுடைய கொளுகந்தலாகே ராஹுல ராமதாச என்பவருக்கு அற்றோணி தத்துவத்தை வழங்குவதற்காக அவுஸ்திரேலியா, சிட்னி நகரில் இலங்கை தூதுவராலயத்தில் அதிகாரமுடைய அலுவலர் திரு. எ ச் ஜி. யு. புஷ்பகுமாரவினால் 2008, சனவரி மாதம் 11 ஆம் திகதி அத்தாட்சிப்படுதப்பட்டு பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் ஊவ, சப்பிரகமுவ வலய அலுவலகத்தில் 3 ஆவது தொகுதி, 106 ஆம் பக்கத்தில் 78 ஆம் இலக்க நாட்புத்தகத்தில் பதிவு பெற்றுள்ள அற்றோணித்தத்துவம் 2016, சனவரி மாதம் 12 ஆம் திகதியிலிருந்து செயற்படும் வகையில் இரத்து செய்யப்பட்டுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

மேலும், இந்த அற்றோணித் தத்துவத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் எவ்வித செயற்பாடுகளுக்கும் நான் பொறுப்பாளியல்ல என்பதை அறியத்தருகின்றேன்.

கொளுகந்தகே உதயாங்கனி ராமதாச

2-304

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

பொரலஸ்கமுவ, இல. 445 1/2, கொழும்பு வீதி, பெபிலியான என்ற முகவரியில் அமைந்துள்ள ஒலிம்பஸ் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் ( பிறைவெட்) லிமிட்டெட் என்ற எமது நிறுவனம், கஷ்மி வாஸனா கபுவெல்ல என்ற கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசினால் அத்தாட்சிப் படுத்தப்பட்டு, பத்தரமுல்லை, இல /51/10 சீ, 9 ஆம் லேன் விக்ரமசிங்கபுர என்ற முகவரியைச் சேர்ந்த புலத்வத்த வலவ்வே கித்சிறி நிஷாட் திஸாநாயக என்பவருக்கு வழங்கப்பட்ட 118 ஆம் இலக்க 2015. 10. 20ஆம் திகதியிடப்பட்ட அற்றோணித் தத்துவம் மற்றும் விலைமனு ஆவணங்கள் தொடர்பான நடவடிக்கைகளில் அவருக்கு வழங்கப்பட்ட அதிகாரம் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இரத்துச் செய்யப்பட்டதாக சம்பந்தப்பட்ட அனைவருக்கும் அறிவித்துக் கொள்கின்றேன்.

2-338

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

குருத்தலாவ, சற்மல் தோட்டம் ( முன்னால் சற்மல் தோட்டம் கரகஸ்தன்ன மற்றும் இல. 214, சற்மல் தோட்டம், கரகஸ்தன்ன) 720850893 X என்ற தேசிய அடையாள அட்டையை உடையவரான டானியல் அந்தோனி பெயார்வெதர் ஆகிய நான்,

1. கொழும்பு 6, எட்மண்ட் வீதி, 36/55 என்ற இலக்கத்தைச் சார்ந்தவரும் 671210832 V என்ற தேசிய அடையாள அட்டையையுடையவரும் பண்டாரவளை பிரசித்த நொத்தரிசு பி. எம். பி ஆர். கே. பஸ்நாயக்க என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் 2011, யூலை 29 ஆம் திகதியையும் 325 ஆம் இலக்கத்தையுமுடையதும் சந்தன புஞ்சிஹேவ என்பவரை நியமித்த விசேட அற்றோணித் தத்துவம், மற்றும்

2. கடுவெல, வெலிவிட்ட, தேவாலய வீதி, 145 ஆம் இலக்கத்தைச் சார்ந்தவரும் 511863430 V என்ற இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையையுமுடையவருமான மாத்தராகே டொன் ஆனந்த அல்லது லிவ்லின் ஜேம்ஸ் கவிரத்ன என்பவரை பண்டாரவளை பிரசித்த நொத்தாரிஸ் பி. எம். பி ஆர். கே. பஸ்நாயக்க என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் 2011 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆம் திகதியிடப்பட்டதும் 324 என்ற இலக்கத்தையுமுடையதுமான விசேட அற்றோணித்தத்துவத்தால் மேற்குறிப்பிட்டவரை நியமனம் செய்யப்பட்டதுமான, அற்றோணித் தத்துவங்களை இன்று முதற்கொண்டு இல்லாதொழித்துள்ளேன் என இலங்கைச் சனநாயக குடியரசிற்கும் மற்றும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

டானியல் அந்தோனி பெயர்வெதர்,
2016, சனவரி 16 ஆந் திகதி.

2-344

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இந்தியா, சென்னை 600101 என்நகர் வெஸ்ட், எக்ஸ்டென்சன், இல. 484 இல் மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஹோமாகம, பனாகொட, டெம்பல்பேக், வர்த்தக வலயம், இரண்டாம் நிலை லொட் இலக்கம் 1 இல் அமைந்துள்ள வரையறுக்கப்பட்ட சின் ஸ்டீன்ஸ் பிரைவேற் லிமிட்டெட்டில் பஜீர் சீன் ( இந்திய கடவுச்சீட்டு இலக்கம் Z 2737376 )ஆகிய நான், என்னால் மீகொடை, ஸ்ரீ குனானந்த மாவத்தை, "சமன்" இலக்கம் 323 இல் வசிக்கும் புலத்சிங்களகெ தக்சின தேவின்த குரே ஆகியவரை எனது அற்றோணித் தத்துவக்காரராக நியமித்துள்ளேன், பிரசித்த நொத்தாரிச பி. எஸ்.பி.குரே அவர்களினால் எழுதி உறுதிப்படுத்திய 19441 ஆம் இலக்கம் மற்றும் 2015. 01. 05 ஆந் திகதியுடைய விசேட அற்றோணிப் பத்திரத்தை இன்று முதல் இரத்துச் செய்வதாகவும், வெற்றும் வெறுமானதாகவும் அதிகாரத்தை இரத்துச் செய்வதாகவும் அந்த அற்றோணி அதிகாரப் பத்திரத்தினூடாக அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்த அலுவல்களை இன்றிலிருந்து இரத்து செய்வதாகவும் இத்தால் அறியத்தருகின்றேன்.

பஜீர் சீன்,

2-402

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

75C , அம்பலான்வத்த வீதி, ஹீனத்தி குமுர, தலங்கம வடக்கு, என்ற முகவரியையுடைய சட்டத்தரணி , நொத்தாரிஸ் டி.பி. அதுகோரள அவர்களிளால் உறுதிப்படுத்தப்பட்ட 2007, திசெம்பர் 21 ஆந் திகதியிடப்பட்ட எண். -1223 ஆகிய இலக்கத்தையுடைய சட்டத்தரணியின் அதிகாரம், 303130322 V என்ற தே. அ.அ. இலக்கமுடைய, 14 எலியட் பிளேஸ் கொழும்பு 8 என்ற முகவரியையுடைய அக்மீமன விதான ஆரச்சிகே சுமனபால என்பவருக்கு 581333013V என்ற தே. அ. அட்டை இலக்கமுடைய இலக்கம் 14, எலியட் பிளேஸ், கொழும்பு 8, என்ற முகவரியையுடைய பிரீதி சுதர்ஷன காமினி அக்மிமன ஆகிய என் மூலம் வழங்கப்பட்டது என்று இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் மற்றும் பொது மக்களுக்கு வழங்கப்படும் இவ்வறிப்பானது இத்துடன் இந்தத் திகதியிலிருந்து திரும்பப் பெறப்பட்டு, நீக்கப்பட்டு , இரத்து செய்யப்படுகிறது. இந்தத் திகதியிலிருந்து அக்மீமன விதான ஆரச்சிகே சுமனபால அவருடன் சம்பந்தப்படும் எந்த பரிமாற்றங்களுக்கும் என் சார்பாக எந்தவித பொறுப்புமேற்கமாட்டேன்.

2-376

---

## அற்றோணி அதிகாரத்தை இரத்துச் செய்தல்

75 C, அம்பலான்வத்த வீதி, ஹீனத்தி குமுர, தலங்கம வடக்கு, என்ற முகவரியையுடைய சட்டத்தரணி, நொத்தாரிஸ் D. P. அதுகோரல அவர்களினால் உறுதிப்படுத்தப்பட்ட, 2007 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 21 ஆம் திகதியிடப்பட்ட 1222 ஆம் இலக்கமுடைய சட்டத்தரணியின் அதிகாரம் 303130322 V என்ற தே.அ.அ. இலக்கமுடைய , 14, எலியட் பிளேஸ், கொழும்பு 8 என்ற முகவரியையுடைய அக்மீமன விதான ஆரச்சிகே சுமனபால என்பவருக்கு 665581098 V என்ற தே.அ.அ.இலக்கமுடைய இலக்கம் 14, எலியட் பிளேஸ், கொழும்பு 8 என்ற முகவரியையுடைய மெரின்னாகே உதிதா பிரியதர்ஷனி கோஸ்டா ஆகிய என் மூலம் வழங்கப்பட்டது என்று இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் மற்றும் பொது மக்களுக்கு வழங்கப்படும் இவ்வறிவிப்பானது இத்துடன் இந்தத் திகதியிலிருந்து திரும்ப பெறப்பட்டு நீக்கப்பட்டு இரத்து செய்யப்படுகிறது. இந்தத் திகதியிலிருந்து அக்மீமன விதான ஆரச்சிகே சுமனபால அவருடன் சம்பந்தப்படும் எந்த பரிமாற்றங்களுக்கும் என் சார்பாக எந்தவித பொறுப்பேற்கமாட்டேன்.

2-377

---

## அற்றோணி அதிகாரத்தை இரத்துச் செய்தல்

அங்கொடை, அவிஸ்ஸாவெல்ல வீதி, இல. 338/4, என்ற இடத்தில் வதியும், ஆஷா அனுஷா விஜேசிங்ஹ குணரத்ன ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் மற்றும் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் இத்தால் அறிவித்துக்கொள்வது, என்னால் கையொப்பமிட்ட கொழும்பு பிரசித்த நொத்தாரிசு திரு. ஆர்.டி. தர்மரத்னம் அவர்களால் 2002. 07.18 அன்று அத்தாட்சிப் படுத்தப்பட்ட இலக்கம் 2140 ஐ உடைய அற்றோணி அதிகாரத்தின் மூலம் எனது அற்றோணி தத்துவகாரரான நுகேகொடை நாவல வீதி, இலக்கம் 177/4 இல் வதியும் றோஹண விதானகமகே ( தே.அ.அ. இல. 58276272V என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணி அதிகாரம் இத்துடன் இரத்து செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்பட்டுவிட்டது என்பதாகும்.

இத்தினத்திலிருந்து அவ்வற்றோணி அதிகாரத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கைக்கும், கொடுக்கல் வாங்கல்களுக்கும் தான் பொறுப்பாக இருக்கவோ கட்டுபடவோ மாட்டேன் எனவும் அறியத்தருகின்றேன்.

2-525

# ஏல விற்பனைகள்

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்*

கடன் தொடர்பு இல. 70696455,70882477, 71390241

செங்கலடி, பிரதான வீதி, இல. 321 ஐச் சேர்ந்த திருவாளர்கள் ஜுஹஸ் அக்ரோ டெய்ரீஸ் ( பிறைவேட் ) லிமிட்டெட்டின் உரிமையாளர் செங்கலடி, பிரதான வீதியைச் சேர்ந்த திரு .தங்கமுத்து ஜயசிங்கம் மற்றும் திருமதி புஷ்பலதா ஜயசிங்கம் ஆகியோர் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை

இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2016.01.14 ஆந் திகதிய 1950 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2016.01.04 ஆந் திகதிய ''தினமின'', ''டெய்லி நியூஸ்'' மற்றும் ''தினகரன்'' ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதிவரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின்கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 290, ஹவ்லொக் வீதி, கொழும்பு 5 என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் சொக்மன் & சமரவிக்ரம ஏல நிறுவனத்தின் ஏலதாரர் 2016.03.03 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணை

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம், ஏறாவூர் பற்றுவில் வாட் இல. 01, ஏறாவூர் நகரம் பிரதேச சபை எல்லைகளுள் ஏறாவூர் கிராமத்தில் ஏறாவூர் 04 இல் அமைந்த வரிமதிப்பு இல. 236 தற்சமயம் திருகோணமலை வீதி, வரிமதிப்பிலக்கம் இல. 280 ஐக் கொண்ட ''நாவற்ரோத்துரத்து வளவு'' என அழைக்கப்படும் காணி மத்திய பகுதியில் கிழக்கில் அரைப்பங்கும் மற்றும் கிழக்குப் பகுதியில் கிழக்கில் அரைப்பங்கும் வடக்கில்: எம். ஐ. அப்துல் ஹமீது மற்றும் எம். ஐ. ஏ. மரியா உம்மாவுக்கும் சொந்தமான காணியும்; கிழக்கு: காணியும்; தெற்கு: பி டபிள்யூ டீ வீதியும்; ; மேற்கு: எம். ஏ. சாகுல் ஹமீது ஹாஜியார், எம். ஐ.ஏ. அப்துல் ஹமீது மற்றும் எம். ஐ. ஏ. மரியா உம்மா ஆகியோருக்கு சொந்தமான காணியும் எல்லைகளாகக் கொண்டு இரண்டு றூட் பதினான்கு பேர்ச்சு (0ஏ. 2றூ. 14பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், வெளிவீடுகள், கிணறு, G K திட்டமிடலாளர் மற்றும் இயந்திரம், வாங்குகள், கதிரைகள், மற்றும் ஏனைய உபகரணங்கள் ஆகும்.

இது மட்டக்களப்பு மாவட்டக் காணிப்பதிவகத்தில் A205/253 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் A. சிங்கராஜா தயாரித்த 2008, ஒற்றோபர் 16 ஆம் திகதியிடப்பட்ட அளவை வரைபடம் இல. AS/08/EP/711 இன் பிரகாரம் மேற்குறிப்பிட்ட காணித்துண்டு பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட ஏறாவூர் கிராமத்தில் ஏறாவூர் 4 இல் அமைந்துள்ள ''நாவற்ரோத்துரத்து வளவு'' என அழைக்கப்படும் காணியில் மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. AS/08/E P/711 இல் விபரித்த துண்டு 2 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கு: மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் துண்டு 1 உம் தற்போதைய சுவர்ணமலர் மற்றும் ஏனையோருக்கும் சொந்தமான தோட்டமும்; கிழக்கு: தற்போதைய ஒழுங்கையும்; தெற்கில் : திருகோணமலை வீதியும்; மேற்கு: T. ஜயசிங்கவிற்கும் மற்றும் ஏனையோருக்கும் சொந்தமான தோட்டமும் எல்லைகளாகக் கொண்டு இரண்டு றூட் ஒரு பேர்ச்சு (0ஏ. 2றூ. 1பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

திரு. V. சேகராஜசிங்கம்,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
செங்கலடி.

2-372

---

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்*

கடன் தொடர்பு இல. 73378376, 76079860

கந்தானை, ரிலஉல்ல, சதாசரண மாவத்தை, இல. 43/3 ஐச் சேர்ந்த திரு. ஜே.எஸ் பெர்ணான்டோ ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை

இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2015.12.11 ஆந் திகதிய 1945 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2015.12.01 ஆந் திகதிய ''தினமின'', ''டெய்லி நியூஸ்'' மற்றும் ''தினகரன்'' ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதிவரை வருமதியாக உள்ள வட்டியையும் செலவு மற்றும் மேற்கூறிய குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின்கீழ் அறவிடக்கூடிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இதன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள சொத்தும் நிலமனையையும் திருவாளர்கள் T&H ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. T. கருணாரத்ன அவர்கள் 2016.03.05 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

### முதலாவது அட்டவணை

1. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், கம்பஹா பதிவப் பிரிவில் அலுத்குரு கோரளை ராகம்பற்றுவில் ஜா- எல பிரதேச சபை எல்லைகளுள் கந்தானை உப அலுவலகத்துள் ரிலஉல்லயில் சதாசரண மாவத்தையில் அமைந்த ''பங்களாவத்த'' என பதிவு செய்யப் பட்டிருப்பினும் ''பங்களோ புளொக்'' என அழைக்கப்படும் காணியின்

உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் N.D.G.C. குணசேகர அவர்களால் தயாரிக்கப்பட்ட 1999 நவெம்பர் 27 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 1911 இல்விபரித்த துண்டு 3C என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கு: துண்டு இல. 5 மற்றும் 3B யும்; கிழக்கு : A.M.ஜோசப் சில்வாவின் ஆதனமும்; தெற்கு: A.L. பெரேராவின் ஆதனமும்; மேற்கு: துண்டுகள் 4 மற்றும் 5 எம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1911 இன்படி பதினொரு தசம் ஒன்பது சைபர் பேர்ச்சு (0ஏ. 2றூ. 11.90பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதுமாகும். இது கம்பஹா காணிப்பதிவகத்தில் பி.448/250 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

### இரண்டாவது அட்டவணை

மேல் மாகாணம் கம்பஹா மாவட்டம் , கம்பஹா பதிவுப்பிரிவில் அலுத்குரு கோரளை ராகம்பற்றுவில் ஜா-எல பிரதேச சபை எல்லைகளுள் கந்தானை உப அலுவலகத்தில் ரிலஉல்லயில் சதாசரண மாவத்தையில் அமைந்து பங்களா வத்த என பதிவு செய்யப்பட்டிருப்பினும் ''பங்களோ புளொக்'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நில அளவையாளர் N.D.G.C. குணசேகர தயாரித்த 1999, நவெம்பர் 27 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல.1911 இல் விபரித்த துண்டு 5( 12 அடி அகலப் பாதைக்கு ஒதுக்கப்பட்டது ) என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கு: துண்டு 1மற்றும் 2 உம்; கிழக்கு: துண்டு 3A, 3B மற்றும் 3Cயும்; தெற்கு: துண்டு 4 மற்றும் 3 Cயும் ; மேற்கு : சதாசரண மாவத்தையும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1911 இன்படி ஆறு தசம் ஆறு சைபர் பேர்ச்சு ( 0ஏ.0றூ.6.60பே.) விஸ்தீரண முடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது கம்பஹா காணிப்பதிவகத்தில் B 448/246 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

திரு. S. கொடிதுவக்கு,
சிரேஷ்ட முகாமையாளர், (அறவிடல்).

இலங்கை வங்கி,
புறக்கோட்டை.

2-373

---

### இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்

கோட்டை, எத்துல்கோட்டை, 6 ஆவது ஒழுங்கை, இல. 941/28 இல் அமைந்த எக்ஸ்பிரஸ் மார்க்கட்டிங் இம்பெக்ஸ் என்னும் பெயரிலும் மாதிரியிலும் வியாபாரம் நடாத்துகின்ற தொலைஹல கங்கானம்கே குலரத்ன மார்டின் அல்லது தொலைஹல கங்கானம்கே குலரத்ன என்பவரின் கடன் பொறுப்புக்களுக்காக ஈடுவைத்த ராஜகிரிய, நாவல வளவ்வத்த, பிளேஸ், இல. 19/1 C இல் அமைந்த ஆதனம்.

இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2015.02.27 ஆந் திகதிய 1904ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2015.02.16 ஆந் திகதிய ''தினமின'', ''டெய்லி நியூஸ்'' மற்றும் ''தினகரன்'' ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதிவரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின்கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 182/3 (50/3), விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த T&H ஏல நிறுவனத்தின் ஏலதாரர் 2016.03.04 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணை

மேல் மாகாணம் கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளை பல்லேபற்றுவில் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர எல்லைகளுள் மற்றும்ள பிரதேச செயலகப் பிரிவில் நாவல மேற்கு 520 ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவில் நாவலயில் அமைந்த வளவ்வத்த பிளேஸ் வரிமதிப்பு இலக்கம் 19/1 C ஐக் கொண்ட ''ஹெடவககஹவத்த, கஹட்டகஹவத்த அல்லது கொரககஹவதத்'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் D.A. வீரக்கொடி தயாரிதத் 1997 ஆம் ஆண்டு நவம்பர் 22 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 601 B இல் விபரித்த துண்டு 2 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறிதத் காணித்துண்டு வடக்கில்: துண்டு 1 உம்; கிழக்கில்: வளவ்வத்த பிளேஸ் வரைபடம் இல. 27/90 இல் துண்டு 1 இன் மீதிப்பாகமும்; தெற்கில்: P கால்லகேயின் மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 27/90 இல் துண்டு 2 உம்; மேற்கில்: வளவ்வத்த பிளேசும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 601 B இன் படி பதினைந்து தசம் ஐந்து பேர்ச்சு (0ஏ. 0றூ. 15.5பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும்.

துண்டு 2 என அடையாளமிட்ட மேற்குறிப்பிட்ட காணித்துண்டு பின்வரும் காணியிலிருந்து மீளளவை செய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட நாவலயில் அமைந்த 'ஹெடவககஹவத்த, கஹட்டகஹவத்த அல்லது கொரககஹவத்த' என அழைக்கப்படும் காணியின் உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் D, A. வீரக்கொடி தயாரித்த 1997, யூலை 16 ஆந் திகதியிட்ட வரைபடம் இல . 590 இல் விபரித்த துண்டு A1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கு: துண்டு A 2 உம்; கிழக்கு: P கால்லகே என்பவரின் வரைபடம் இல.27/90 இல் துண்டு 1 இன் மீதிப்பாகமும்; தெற்கு: வரைபடம் இல. 27/90 இல் துண்டு 2 உம்; மேற்கு: வளவ்வத்த பிளேசும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல.590 இன்படி பதினைந்து தசம் ஐந்து சைபர் பேர்ச்சு( 0ஏ.0றூ.15.50பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது நுகேகொடை தெல்கந்த காணிப்பதிவகத்தில் ஆ 3064/218 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது. ( மேற்குறிப்பிட்ட துண்டு 2 தற்போது வரிமதிப்பு இல. 23 என மதிப்பிடப்பட்டுள்ளது)

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

தொடர்பாடல் முகாமையாளர்,
அறவிடல்- தொகுதி.

இலங்கை வங்கி,
அறவிடல் தொகுதிப் பிரிவ,
'BOC சதுக்கம்'
இல. 01, இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு 1.

**குறிப்பு** : இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397ஆம்அத்தியாயமான) 21ஆம் பிரிவின்கீழ் அறவித்தலை வெளியிட்ட பின்பு எக்ஸ்பிரஸ் மார்க்கடிங் இம்பெக்ஸ் நிலையத்தின் திரு. தொலைஹல கங்கானம்கே குலரத்ன மார்ட்டின் என்பவர் 2015.03.25 ஆம் திகதி 100,000.00 ரூபா 2015.07.14 ஆம் திகதி 500,000.00 ரூபாவும் வைப்புச் செய்துள்ளதுடன் அத்தொகை தொங்கற் கடன் கணக்கு கடன் கொடுநர்கள் கணக்கில் காணப்படுகின்றது.

2-379

**செலான் வங்கி பீஎல்சீ - ஹவ்லொக் டவுன் கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**ஏல விற்பனை**

'' கடன்பட்டோர்'' என்ற வகையில் கொழும்பு 7 ஐச் சேர்ந்த ஜெயவீர ஆராய்ச்சிகே தசரத் லுஷான் பெரேரா என்பவருக்காக வழங்கப்பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி பி எல் சிக்கு ஈடு வைக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணம் கொழும்பு மாவட்டம் மாவட்டம் மாநகர சபையில் திம்பிரிகஸ்யாய 40 ஆம் வட்டாரத்தில் டொரிங்டன் அவன்யூ, திம்பிரிகஸ்யாயவில் வரிமதிப்பீட்டிலக்கம் 290/2 டொரிங்டன் அவன்யூவில் அமைந்துள்ள காணித்துண்டு F சகலதும் பிரிக்கப்பட்டு குறிக்கப்பட்டுள்ள காணி அனுமதிபெற்ற நிலஅளவையாளர் கே. பி. விஜேவீரவினால் தயாரிக்கப்பட்டு 2002.11.12 ஆம் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 2074 துண்டு F ஒன்பது தசம் ஒன்று இரண்டு பேர்ச்சு (0ஏ. 0றூ.9.12பே.) அல்லது 0.0231 ஹெக்டேயர் விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.

மேற்கூறப்பட்ட திம்பிரிகஸ்யாய 40 ஆம் வட்டாரத்தில் டொரிங்டன் அவன்யூவில், திம்பிரிகஸ்யாயவில் அமைந்துள்ள காணித்துண்டு A மற்றும் E ( வீதிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது) சகலதும் பிரிக்கப்பட்ட குறிப்பிடப்பட்டுள்ள காணி அனுமதிபெற்ற நிலஅளவையாளர் கே. பி. விஜேயவீரவினால் தயாரிக்கப்பட்டு 2002.11.12 ஆம் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 2074 இல் மேற்கூறப்பட்ட துண்டு A நாலு தசம் ஐந்து சைபர் பேர்ச்சு ( 0ஏ.0றூ.4.50 பே.) அல்லது 0.0114 ஹெக்டேயர் மற்றும் துண்டு E ஆறு தசம் இரண்டு இரண்டு பேர்ச்சு (0ஏ.0றூ.6.22பே) அல்லது 0.0157 ஹெக்டேயர் விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.

அத்துடன் வாகனம் போக்குவரத்து செய்வதற்கும் நடைபாதை விதிமுறைக்கமையவும், மின்சார கம்பி இணைப்புக்கள், தொலைபேசி தொடர்புகள், மேலாக கம்பி இணைப்புக்களும் தண்ணீர், கழிவுநீர், குழாய்களும் இணைப்புக்களும் அதன் மேலாகவும் அதனூடாகவும் இணைக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணம் கொழும்பு மாவட்ட செயலாளர் பிரிவுக்குட்பட்ட சல்பிட்டி கோரள திம்பிரகஸ்யாய 40 ஆம் வட்டாரத்தில் மாநகர சபை எல்லைக்குட்பட்ட திம்பிரிகஸ்யாயவில் அமைந்துள்ள ''தெல்கஹாவத்த'' என்று அழைக்கப்படுகின்ற காணித்துண்டு 6 ( வீதிக்காக 20 அடி அகலத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது) சகலதும் பிரிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள காணி, அனுமதிபெற்ற நிலஅளவையாளர் ரஞ்சித் கருணாரத்னவினால் தயாரிக்கப்பட்டு 1976. 08.04 ஆம் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 346 துண்டு 6 இருபத்தி மூன்று தசம் நாலு ஏழு பேர்ச்சு ( 0ஏ. 0றூ. 23.47 பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.

மேலே விவரிக்கப்பட்ட காணியை நான் 2016, பெப்புருவரி 29 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யவுள்ளேன்.

**ஆதனத்திற்குச் செல்லும் வழி.**- திம்பிரிகஸ்யாய சந்தியிலிருந்து திம்பிரிகஸ்யாய நாராஹேன்பிட்ட வீதி மார்க்கமாக சுமார் 550 மீற்றர் பயணம் சென்று வரும் டொரிங்டன் அவன்யூவினால் தொடர்ந்து சுமார் 50 மீற். சென்றால் குறிக்கப்பட்ட காணியின் பிரதான வாயிலை அடையலாம், டொரிங்டன் அவன்யூ பௌத்தாலோக் மாவத்தையில் அருகில் அமைந்துள்ளது.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக.**- 2014.03.07 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2014.03.10 ஆந் திகதிய ''டெயிலி மிரர்'' ,''லங்காதீப'' பத்திரிகைகளையும் மற்றும் 2014.02.19 ஆந் திகதிய ''தினக்குரல்'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கட்டணம் செலுத்தும் விதம்.**-வெற்றிகரமான கொள்வனவாளர் ஏல விற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளை பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையில் 10% ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கான உள்ளூர் விற்பனை வரி அத்துடன் உள்ளூர் அதிகார சபைக்கு உள்ளூர் விற்பனை வரி (1% பதிலாக) அரசினால் அல்லது உள்ளூர் அதிகார சபையினால் விதிக்கப்பட்ட வேறு ஏனைய வரி ;
(3) ஏலவிற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் 2.5% ;
(4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் 2,000 ரூபா ;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் 500 ரூபா ;
(6) விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு மற்றும் கொள்வனவு விலையின் மிகுதி 90% விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பி எல் சி இல் வைப்புச் செய்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப மிகுதி தொகை 30 நாட்களுக்குள் வைப்புச் செய்யாவிடின் முன் வைப்புச் செய்த தொகையில் 10% கழிவு தள்ளுபடி செய்து மீள் விற்பனை செய்ய வங்கிக்கு முழு உரித்துடையது.

காணி உறுதி ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்கைள கொழும்பு- 3, காலி வீதி, இல. 90, செலான் வங்கி பீ எல் சி, பிரத்தியேக முகாமையாளர் ( சட்டம்) இடமிருந்து பெற்றுக்கொள்ளவும் பார்வையிடவும் முடியும். தொ.பே. 2456479, 2456478. :-

''பிரத்தியேக முகாமையாளர்-சட்டம், செலான் வங்கி பீஎல்சீ, செலான் கோபுரம், இல. 90, காலி வீதி, கொழும்பு 3இடமிருந்துந்து பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். ; தொலைபேசி இல. 011-2456485, 011-2456479.

துசித கருணாரத்ன,
அனுமதிபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர்.

ரி அன்ட் எச் ஒக்சன்,
இல.50/3, விஹார மாவத்தை,
கொலன்னாவ.

2-385

### சம்பத் வங்கி பீ எல் சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மற்றும் 19 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

ஹினிதும்பத்து பிளான்டேஷன் ( பிறைவேட்) லிமிட்டெட்

கணக்கு இல. 0035 1000 7262

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2014.01.09 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2014.03.28 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியிலும் 2014.03.17 ஆந் திகதிய "திவயின", "ஐலன்ட்", "தினக்குரல்" தினசரி பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான, ஐம்பத்து மூன்று இலட்சத்த எழுபத்தியேழாயிரத்து நானூற்று ஐம்பத்து நான்கு ரூபா தொண்ணூற்று இரண்டு சதம் (ரூ. 53,77,454.92) 2013, நவெம்பர் 13ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை பத்தொன்பது இலட்சம் ரூபா (ரூ.19,00,000) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினைந்து சதவீதம் (15%) மேலும் முப்பது இலட்சம் ரூபா (ரூ.30,00,000) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினேழு தசம் ஐந்து (17.5%) அறவிடப்படும் வட்டியும் வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக்கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவு பெற்ற ஏலதாரரான சொக்மன் அன்ட் சமரவிக்ரம என்பவர்கள் மூலமாக 2016.04.27 ஆந் திகதி மு. ப. 11.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.

#### அட்டவணை

தென் மாகாணம் காலி மாவட்டம் , ஹினிதும் பத்துவை ஹபரகட, கிழக்கு ஹபரகட கிராம அலுவலர் பிரிவில் அமைந்த "நாரகொப்பவாவ" ( வழக்கு இல.P/ 5485 , காலி மாவட்ட நீதி மன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அட்டவணையில்) என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எப். குருகே என்பவரால் தயாரிக்கப்பட்ட 1979 மே 08 ஆந் திகதியிடப்பட்டஇல. 2367 P எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்து பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 38 B, 40, 41 மற்றும் 42 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு: இக் காணியின் லொட் 38 A மற்றும் அரச காணி; கிழக்கு: அரச காணி மற்றும் இக் காணியின் லொட் 43; தெற்கு: ஹினிதும் முதல் நெலுவ வரையான பிரதான வீதி மற்றும் இக் காணியின் லொட் 39 மற்றும்; மேற்கு: இக் காணியின் லொட்கள் 39 மற்றும் 44( வீதி) ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு ஏக்கர் நான்கு தசம் இரண்டு இரண்டு ஐந்து ஆறு பேர்ச். (1ஏ. 0றூ. 4.2256பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வீதி உரிமைகள் மற்றும் ஏனைய சௌகரியங்கள் , வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 2367P எனும் வரைபடத்திற்கு அமைவாக காலி காணிப் பதிவகத்தில் பரிமாணம் / பக்கம் W 01/25 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அண்மைய நில அளவீட்டிற்கு அமைவாக

கூறப்பட்ட கிழக்கு ஹபரகட கிராம அலுவலர் பிரிவில் அமைந்த் "நாரகொப்புவாவ" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவபெற்ற நில அளவையாளர் கே. வீ. பீ. பி. கீர்த்திலால் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2011, செத்தெம்பர் 29 ஆந் திகதியிடப்பட்டஇல. 883 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் A என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன வடக்கு: 2367 எனும் வரைபடத்தில் லொட் 38 A எனும் அரச காணி; கிழக்கு: அரச காணி மற்றும் இல. 2367 எனும் வரைபடத்தில் லொட் 43; தெற்கு: ஹினிதும முதல் நெலுவ வரையான பிரதான வீதி மற்றும் இக் காணியின் லொட் 39 மற்றும் மேற்கிற்கு: இக் காணியின் லொட்கள் 39 மற்றும் தோட்டத்தை அடையும் வீதி ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு ஏக்கர் நான்கு பேர்ச்சு (1ஏ. 0றூ. 4பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள் , வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 883 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிக் குழுமச் செயலாளர்.

2-398/4